**இந்திய தூதரகம்**
**கோலாலம்பூர், மலேசியா**

## <u>ஒரே விண்கலனில் 104 செயற்கைக்கோள்களுடன் பிஎஸ்எல்வி – சி37 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது</u>



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) பிப்ரவரி 15, 2017 புதன்கிழமை அன்று 714 கிலோ எடை கொண்ட இந்தியாவின் கார்டோசாட்–2 என்ற செயற்கைக்கோளை பிஎஸ்எல்வி –சி37 ராக்கெட் மூலம் ஒரே விண்கலனில் 104 செயற்கைக் கோள்களை ஸ்ரீஹரிக்கோட்டா, சதிஷ் தவான் விண்வெளி ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் பாய்ச்சி சாதனைப் படைத்துள்ளது.

ஒரே விண்கலனில் அதிக எண்ணிக்கையிலான செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பியது இதுவே முதன் முறையாகும். இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இந்திய நாட்டிற்குப் புகழ் சேர்த்த விண்வெளி அறிவியலாளர்களின் சாதனையைப் பாராட்டி தனது வாழ்த்தினைத் தெரிவித்துக் கொண்டார்.

பிஎஸ்எல்வி விண்கலம், தொடர்ந்து 38வது முறையாக விண்ணுக்கு வெற்றிகரமாக அனுப்பப்பட்டுள்ளது. தற்போது, 46 இந்திய செயற்கைக்கோள்கள் பிஎஸ்எல்வி விண்கலத்தால் விண்ணுக்குப் பாய்ச்சப்பட்டுள்ளது. மேலும், ஆறு நாடுகளிலிருந்து 101 அயல்நாட்டு நானோ வகை செயற்கைக்கோள்கள் சர்வதேச முறையில் விண்ணுலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அவற்றில், அமெரிக்காவின் 96 செயற்கைக்கோள்களும் மற்றும் இஸ்ரேல், கஜகஸ்தான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நெதர்லாந்து, சுவிச்சர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து முறையே 1 செயற்கைக்கோள்களும் விண்ணுக்கு ஏவப்பட்டது. இன்றைய சாதனையைத் தொடர்ந்து, இந்திய பிஎஸ்எல்வி விண்கலம் மூலம் விண்ணுக்கு அனுப்பப்பட்ட அயல்நாட்டு செயற்கைக்கோள்களின் மொத்த எண்ணிக்கை 180ஆக எட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

*****